

ரெட்டியார்சத்திரம் ஒன்றியம், புதுச்சத்திரம் ஊராட்சியில் ரூ.28லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட புதிய ஊராட்சி மன்ற அலுவலக கட்டிடம், ரூ.11லட்சம் மதிப்பில் கட்டப்பட்ட கால்நடை மருத்துவமனை கட்டிடத்தை ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி திறந்து வைத்தார். அருகில் கிழக்கு மாவட்ட திமுக பொருளாளர் சத்தியமூர்த்தி, ரெட்டியார்சத்திரம் வடக்கு ஒன்றிய செயலாளர் மணி, ஊராட்சி மன்றத்தலைவர் மெர்சி என்ற லெட்சுமி, துணைத்தலைவர் கிருஷ்ணவேணி காளியப்பன் உட்பட பலர் உள்ளனர்.



கனமழையால் பாதிக்கப்பட்ட இராமநாதபுரம் மாவட்டம் இராமநாதபுரம், பாம்பன், மண்டபம், மற்றும் ராமேஸ்வரம் பகுதிகளில் பார்வையிட்டனர் இதில் ராமேஸ்வரத்தில் மழை நீரால் பாதிக்கப்பட்ட சாலை பகுதியை பார்வையிட்ட போது வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர். ராமச்சந்திரன், மற்றும் பால்வளத்துறை மற்றும் கதர் கிராம தொழில் வாரியத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன், மாவட்டக் கழகச் செயலாளர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம், எம்.எல்.ஏ, மாவட்ட ஆட்சித் தலைவர் சிம்ரன் ஜீத் சிங் கா லோன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜி. சந்தீஸ், மாவட்ட வருவாய் அலுவலர் கோவிந்தராஜுலு, மற்றும் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன், ராமேஸ்வரம் நகர் மன்ற தலைவர் நாசர் கான், துணைத்தலைவர் பிச்சை உட்பட அரசு அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

### மல்லிப்பட்டினம் இறந்தஆசிரியை குடும்பத்திற்கு

## முதலமைச்சரின் நிவாரணத் தொகை ரூ.5 இலட்சம்!

### அமைச்சர் முனைவர் கோவி.செழியன் வழங்கினார்!

தஞ்சாவூர், நவ.24-

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டைவட்டம், மல்லிப்பட்டினம் அரசு மேல்நிலைப் பள்ளியில் கத்தியால் குத்தப்பட்டு உயிரிழந்த தற்காலிகஆசிரியை செல்வி.ரமணி இறந்ததையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால் அறிவிக்கப்பட்ட பொது நிவாரணத் தொகை ரூ.5,00,000/-க்கான காசோலையை உயர் கல்வித் துறை அமைச்சர் - முனைவர்.கோவி.செழியன் ஆசிரியையின் தாயார் முத்துராணி என்பவரிடம் வழங்கினார்.

தஞ்சாவூர் மாவட்டம், பட்டுக்கோட்டை வட்டம், ஆண்டிக்காடு சரகம், சரபேந்திரராஜபட்டினம் கிராமம், மல்லிப்பட்டினம் என்ற முகவரியைச் சேர்ந்த செல்வி.ரமணி த/பெ.முத்து (26) என்பவர் மல்லிப்பட்டினம் அரசு மேல்நிலைப் பள்ளியில் பள்ளி மேலாண்மை குழுவின் மூலமாக 10.06.2024 அன்று முதல் 6-9ஆம் வகுப்பு வரை தற்காலிக பட்டதாரி தமிழ் ஆசிரியராக வேலை பார்த்து வந்த நிலையில் (20.11.2024) அன்று பள்ளி வளாகத்திலேயே அதே ஊரைச் சேர்ந்த மதன்குமார் த/பெ.பன்னீர்செல்வம் என்பவரால் கத்தியால் குத்தப்பட்டு சம்பவஇடத்திலேயேஇறந்தார். இதையறிந்த தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உடனடியாக சம்பவ இடத்திற்கு உயர்கல்வித் துறைஅமைச்சர்கோவி. செழியன், பள்ளிக்கல்வித்துறைஅமைச்சர்அன்பில்மகேஸ்பொய்யாமொழிஆகியோரைவிரைந்துஅனுப்பி விசாரணைநடத்தஉத்தரவிட்டார்.

பின்னர் அமைச்சர்கள்ஆசிரியையின்உடலுக்குமலரஞ்சலிசெலுத்தி, சம்மந்தப்பட்டபள்ளிதலைமைஆசிரியர், ஆசிரியர்களிடம் விசாரணை நடத்தினர்.

அதனைதொடர்ந்துதமிழ்நாடுமுதலமைச்சர்அவர்கள், இறந்தஆசிரியையின்குடும்பத்திற்குமுதலமைச்சரின் பொது நிவாரணத் தொகை ரூ.5,00,000/ வழங்கப்படும்என்றுஅறிவித்தார். அதனைதொடர்ந்துநிவாரணதொகையான 5 இலட்சத்திற் கான காசோலையானது (21.11.2024) அன்று உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர். கோவி.செழியன் அவர்களால் இறந்த ஆசிரியையின் தாயார் திருமதி.முத்துராணி என்பவரிடம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வின்தஞ்சை தெற்குமாவட்டக்கழகச்செயலாளர்கா.அண்ணாதுரை எம்.எல்.ஏ, ச.முரசொலி எம்.பி., என்.அசோக்குமார் எம்.எல்.ஏ, செல்வி.ஜெயஸ்ரீ, ஏனாதிபாலு, சண்முகபிரியா, தி.பழனிவேல், மு.கி.முத்துமாணிக்கம், எஸ்.ஆர்.என்.செந்தில்குமார்மற்றும்பலர்கலந்து கொண்டனர்.



திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் தொகுதிக்கு உட்பட்ட தோட்டாளம் ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் கலைஞரின் வருமுன் காப்போம் திட்ட மருத்துவ முகாமில் சிறப்பு அழைப்பாளராக ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அ.செ.வில்வநாதன் கலந்து கொண்டு கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகமும் மக்களை தேடி மருத்துவம் திட்டத்தில் மருந்துப் பெட்டகமும் வழங்கினார். நிகழ்ச்சியில் ஒன்றிய குழு பெருந்தலைவர் ப.ச. சுரேஷ்குமார், ஒன்றியக் குழு துணை பெருந்தலைவர் சாந்தி சீனிவாசன் மாதனூர் கிழக்கு ஒன்றிய பொறுப்பாளர்ஜி. ராமமூர்த்தி ஊராட்சி மன்ற தலைவர் தர்மேந்திரா ஒன்றியக் குழு உறுப்பினர் பரிமளா கார்த்திக், வட்டார மருத்துவ அலுவலர் தரணீஸ்வரி, வட்டார சுகாதார மேற்பார்வையாளர் க்.ரஷ்த் மாதனூர் மேற்கு ஒன்றிய துணைச் செயலாளர் சா. சங்கர், மாவட்ட பிரதிநிதி அய்யனூர் அசோகன் மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள் கழக ஊர் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

### கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை

## மாணவர்களுக்கும், முதியோர்களுக்கும் பயனுள்ள வகையில் கொண்டாடிடுவீர்!

தி.மு.க. பொறியாளர் அணியின் மாநில நிர்வாகிகளின் கூட்டம் சென்னையில் 16.11.24 பொறியாளார் அணி அலுவலகத்தில் மாநிலப் பொறியாளர் அணித் தலைவர் துரை. கி.சரவணன்தலைமையில் நடைபெற்றது.

அதில் மாநிலத் துணைச் செயலாளர்கள் கு.சண்முக சுந்தரம், இரா.நரேந்திரன், வே.உமாகாந்த், சி.பிரதீப் மற்றும்இரா.ப.பரமேசுகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கீழ்கண்ட முடிவுகள் எடுக்கப்பட்டன :

1.கழக இளைஞர் அணிச் செயலாளரும், தமிழ்நாடு துணை முதலமைச்சருமான இளைஞர்களின் எழுச்சி நாயகன் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை திமுக பொறியாளர் அணியின் மாவட்ட அமைப்புகள், மக்களுக்குப் பயன்படும் வகையில் சிறப்பாக கொண்டாடிட வேண்டும் என கேட்டுக் கொள்ளப்பட்டது.

2.மாணவர்களுக்கு பயன்படும் வகையில் அருகிலுள்ள அரசுப் பள்ளிக்கு குடிநீர் சுத்திகரிப்பு உபகரணங்கள் வழங்குதல், மாணவிகளின் பாதுகாப்புக்கு சி.சி டிவி காமிராக்கள் அமைத்துத் தருதல், மற்றும் முதியோர் இல்லங்களுக்குத் தேவைப்படும் சமையல் பாத்திரங்கள், பிற உபகரணங்களை வழங்குதல் என அவர்கள் மனம் மகிழும்வண்ணம் துணை முதல்வரின் பிறந்தநாள் கொண்டாட்டங்கள் இருத்தல் வேண்டும்.

3. கழக ஒருங்கிணைப்புக் குழு அளித்த பரிந்துரையின் படியும், கழகத் தலைவர் அவர்களின் ஒப்புதலின்படியும், விரைவில் ஒன்றிய / மாநகர/ நகர / பேரூர் கழக நிர்வாகிகளுக்கான நேர்காணல் விரைவில் நடத்தப்படும். எனவே நவம்பர் இறுதிக்குள் QR Code மூலம் அதிக அளவிலான விண்ணப்பங்கள் பெற்றிட மாவட்ட நிர்வாகிகள் களப்பணி ஆற்றிட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

4.டிசம்பர் 31 தேதிக்குள் அனைத்து நிர்வாகிகளையும் நியமித்து இறுதிப் பட்டியலைத் தலைமைக் கழகத்தில் ஒப்படைக்க பொறியாளர் அணியின் அனைத்து நிர்வாகிகளும் ஒத்துழைப்பு தருமாறு மாநில நிர்வாகம் கேட்டுக் கொள்கிறது.

**எஸ்.கே.பி.கருணா**
மாநிலச் செயலாளர்
கழக பொறியாளர் அணி.

### 2026ல் திராவிட மாடல் ஆட்சியின்

## வெற்றியை உறுதிசெய்யும் 6 தீர்மானங்கள்!

கழகத்தின் உயர்நிலைச் செயல்திட்டக்குழுவின் கூட்டம் கடந்த 20.11.2024ம் நாள் அன்று அறிவாலயத்தில் காலை 10.30 மணியளவில் கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சரின் தலைமையில் தொடங்கியது. கழக செய்திதொடர்புத்துறை செயலாளர் டி.கே.எஸ். இளங்கோவன் ஆறு தீர்மானங்களை வாசித்து, அந்தத் தீர்மானங்களை உயர்மட்ட செயல் திட்டக் குழுவின் ஆய்விற்கு முன்வைத்தார். குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் ஒருமனதாக கரவொலியோடு ஆறு தீர்மானங்களையும் நிறைவேற்றினர்.

அவ்வாறு நிறைவேற்றப்பட்ட ஆறு தீர்மானங்களும், அதில் கண்டுள்ள திராவிட மாடல் அரசால் உருவாக்கப்பட்ட சட்டங்களும், திட்டங்களும் மக்களின் பயன்பாட்டிற்கும், பாதுகாப்பிற்கும் பயன்பட்டுள்ளதா என்பதை களஆய்வு மேற்கொள்வதற்காக கோவை, தூத்துக்குடி, விருதுநகர் ஆகிய மாவட்டங்களுக்கு முதல்வரே நேரில் சென்று களஆய்வுகளை மேற்கொள்வதும், அந்தந்த மாவட்டங்களில் உள்ள கழகச் செயல் வீரர்களைச் சந்தித்து அவர்களின் கருத்துக்களையும், உள்வாங்கிக் கொள்கின்ற செயலும், சிந்தனையும், ஜனநாயக ஆட்சி முறையின் உச்சகட்ட நடவடிக்கைகள் என்பதில் ஐயமில்லை.

ஜனநாயக ஆட்சி முறையில் மக்கள்தான், மக்கள் பிரதிநிதிகளுக்கு ஆட்சி அதிகாரத்தை வழங்குகிறார்கள். எனவே அதிகாரத்தை வழங்கிய மக்களுக்கு, சட்டத்தின் பாதுகாப்பும், திட்டத்தின் பயனும் முழுமையாக எட்டியுள்ளதா என ஒரு மாநிலத்தின் முதலமைச்சரே நேரடியாக களஆய்வு மேற்கொள்வது ஜனநாயக ஆட்சி முறையில் பாராட்டுக்குரிய நடவடிக்கையாகும். இத்தகைய களஆய்வு மேற்கொள்வதன் மூலம் ஆட்சி, அதிகாரத்தை வழங்கிய மக்கள் ஜனநாயக ஆட்சி முறையின் மீது வைத்துள்ள நம்பிக்கை மேலும் வலிமை பெறும்.

மேலும், ஜனநாயகத்தின் மீது ஆழமான அசைக்க முடியாத நம்பிக்கை கொண்ட திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய ஜனநாயகத்திற்கு எதிராக கடந்த காலத்தில் உருவான சக்திகளை தகர்த்து தரைமட்டமாக்கிய "அரசியல் சக்தி" என்பதை கடந்தகாலத்தில் பல கட்டங்களில் நிரூபித்திருக்கிறது. எனவே ஜனநாயக ஆட்சி முறையை அடிப்படை அரசியல் கோட்பாடாகத் தொடக்க காலம் முதல் ஏற்றுக்கொண்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் தமிழ்நாட்டின் முதல்வர், மக்களாட்சியின் மாண்புகள் எந்த வகையிலும் காயப்பட்டுவிடக்கூடாது என்பதில் மிகுந்த அக்கறை எடுத்துக்கொண்டு, "களஆய்வுப் பணிகளை" மேற்கொண்டுள்ளார்கள்.

இந்திய ஒன்றியத்தில் பாரதீய ஜனதாக் கட்சியின் சார்பாக பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் 2014ஆம் ஆண்டு தொடங்கி, உருவாக்கப்படும் சட்டங்களானா லும், திட்டங்களானாலும் இந்திய ஒன்றிய புவியியல் அமைப்பில் இயற்கையாகவே அமைந்துள்ள பன்முகத் தன்மைக்கு எந்த வகையிலும் ஏற்புடையதாக இல்லை. அதுமட்டுமல்லமத இன, மொழி வேறுபாடுகளை கொண்ட பல்வேறு தேசிய இனங்களை உள்ளடக்கிய இந்திய நிலப்பரப்பை "ஒரே நாடு, ஒரே தேர்தல்", "இந்துத்துவா", "இந்து ராஷ்ரம்" என்ற மதவாதக் கோட்பாட்டையும், அரசியல் அதிகாரங்களை மத்தியில் குவிக்கும் ஆட்சிமுறையை உருவாக்கிடத் திட்டமிட்டுப் படிப்படியாக இதற்கான முயற்சியில் ஈடுபட்டு வருகிறார்கள்.



**பொன். முத்துராமலிங்கம்**
முன்னாள் அமைச்சர்,
கழக உயர்நிலை செயல்
திட்டக்குழு உறுப்பினர்

ராஷ்ட்ரிய சுயம்சேவக் சங்க் (ஆர்.எஸ்.எஸ்) என்ற மதவாத அமைப்பின் மதம் சார்ந்த வகுப்புவாத சித்தாந்தங்களை நடைமுறைப்படுத்தும் கருவியாகத்தான் ஒன்றிய அரசு தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. ஒன்றிய அரசின் இந்த முயற்சிகளுக்கு இந்திய அரசியல் சட்டம் தடையாக இருப்பதால், இந்திய அரசியல் சட்டத்தை திருத்தவும், அவசியம் ஏற்பட்டால் நிராகரிக்கவுமான திரைமறைவுத் திட்டத்தோடு ஒன்றிய அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இத்தகைய இக்கட்டான அரசியல் சூழ்நிலையில்தான் தமிழக முதல்வர் ஜனநாயகத்தைப் பாதுகாக்கவும், மதச் சார்பற்றஅரசைஉறுதிப்படுத்தவுமானவிழிப்புணர்ச்சியை மக்கள் மத்தியில் உருவாக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்கள்.

இத்தகைய உயர்ந்த தொலைநோக்கு சிந்தனையுடன் உருவாக்கப்படும் திட்டங்கள்தான் "கட்டணமில்லா மகளிருக்கான விடியல் பேருந்துப் பயணம்", "மகளிருக்கு மாதம் தோறும் ரூபாய் ஆயிரம் உரிமைத் தொகை திட்டம்", "புதுமைப்பெண் திட்டம்", "தமிழ்ப் புதல்வன்" - "நான் முதல்வன்", "மக்களைத் தேடி மருத்துவம் நம்மை காக்கும் 48", பள்ளி மாணவர்களுக்கு தினமும் முதல்வரின் காலை உணவுத் திட்டம்", "குழந்தைகளுக்கு ஊட்டச்சத்தை உறுதிசெய்யும் திட்டம்", "கலைஞர் நூற்றாண்டு நூலகம்" - "உயர்சிறப்பு மருத்துவமனை", "பெருந்தலைவர் காமராஜர் கல்லூரிகள் மேம்பாட்டுத் திட்டம்", "பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டம்", "அண்ணல் அம்பேத்கார் தொழில் முன்னோடித் திட்டம்" என்ற இந்தியாவிற்கே முன்னோடித் திட்டங்கள் நிறை வேற்றப்பட்டு அமல்படுத்தப்படுகிறது.

இந்த திட்டங்களுக்கான அடிப்படை நோக்கம் கல்வி, சுகாதாரம், பெண்ணுரிமை, சமத்துவம், சமூக நீதி ஆகியவைகளாகும். மாநிலங்களுக்கு வழங்கப்பட்டுள்ள குறைந்த பட்ச அதிகாரங்களை பயன்படுத்தி மக்களுக்கு இவ்வளவு நன்மைகளைச் செய்ய இயலுமெனில், மாநில சுயாட்சியை மாநிலங்கள் பெற்றுவிடுமானால் எந்த அளவிற்கு மாநில அரசுகள் அந்தந்த மாநிலங்களுக்கு திட்டங்களை உருவாக்கி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திடமுடியும் என்ற விழிப்புணர்வை உருவாக்க அனைத்து மாநில மக்களையும் சிந்திக்க வைத்துள்ளது. உயர்நிலை செயல்திட்ட கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட முதல் தீர்மானமே மாநில சுயாட்சிக்கான தெளிவையும், விழிப்புணர்வையும் அனைத்து மாநில மக்களிடம் நிச்சயம் உருவாக்கும் என்று அரசியல் நோக்கர்கள் கருதுகிறார்கள்.

இதனைத் தொடர்ந்து ஒன்றிய அரசின் மாநிலங்களுக்கான நிதி ஒதுக்கீட்டுக் கொள்கையில் உள்ள முரண்பாடுகள், பாரபட்சமான பங்கீட்டு முறைகளைச் சுட்டிக் காட்டப்பட்டிருப்பதோடு, இந்த பாரபட்சமான நடவடிக்கைகளுக்கு காரணமான ஒன்றிய அரசைக் கண்டித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மேலும், 16வது நிதிக்குழு தமிழ்நாட்டிற்கு சமீபத்தில் ஆய்விற்காக வந்திருந்த பொழுது முதல்வர் அவர்கள் எடுத்துவைத்த கருத்துக்கள் ஒன்றிய அரசின் நிதி பங்கிட்டு கொள்கையும், நடைமுறையும் குறிப்பாக எதிர்க்கட்சிகள் ஆட்சியில் உள்ள வளர்ந்துவரும் மாநிலங்களுக்கு பெரும் தீங்கினை உருவாக்குவதாகவும், இயற்கைப் பேரிடர் நிவாரண நிதி வழங்களில்கூட பாரபட்சம் காட்டப்படுவது, பாதிக்கப்பட்ட மாநில மக்களை வேதனையின் விளிம்பிற்கே இட்டுச் செல்கிறது எனக்குறிப்பிட்டார்.

16வது நிதிக் குழுவில் நமது மாநிலத்தின் சார்பாக தமிழ்நாடு முதல்வர் எடுத்துவைத்த கருத்துக்கள் மற்ற மாநிலங்களுக்கு, மாநிலசுயாட்சிக்கான திசைகாட்டும் கருவியாக அமைந்துள்ளது என்பதில் கிஞ்சிற்றும் ஐயமில்லை.

மூன்றாவது தீர்மானமாக மீனவர் நலன் காக்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மீனவர்களின் வாழ்வாதாரமே மீன்பிடித் தொழில், இதில் அண்டை நாடுகளான குறிப்பாக இலங்கை அரசும், அதன் கடற்படையும், தமிழக மீனவர்களுக்கு தொடர் நிகழ்வுகளாக இழைத்திடும் இடர்பாடுகளும், தொல்லைகளும் எண்ணிலடங்காதவைகளாகும். இதில் அக்கறையெடுத்து செயல்பட்டு, மீனவர்களைக் காப்பாற்ற வேண்டிய தலையாய கடமையை தட்டிக்கழித்துவரும் ஒன்றிய அரசு, மீனவர்கள் நலனுக்கு எதிரான அரசாகவே செயல்பட்டுக் கொண்டிருப்பதால், மீனவர்கள் தினம், தினம் எதிர்கொள்ளும் இடர்பாடுகளைச் சுட்டிக்காட்டி நிவாரணம் கூறும் தீர்மானம், மீனவர் சமுதாயத்திற்கு நம்பிக்கையும், பாதுகாப்பையும் உறுதி செய் யும் தீர்மானமாக அமைந்துள்ளது.

நான்காவது தீர்மானமாக "மணிப்பூர் தீயை அணைப்பீர்" என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அங்கு நடைபெற்றுக் கொண்டிருப்பது இரண்டு இனக் குழுக்களுக்கு இடையே நடைபெறும் மோதல்களாகும். மேலும், அங்கு நடைபெற்றுக்கொண்டிருப்பதோ பாரதீய ஜனதாக் கட்சியின் ஆட்சி. ஆனால், அங்கு கலவரம் ஆண்டுக்கணக்கில் தொடர்கிறது, யாருக்கும் பாதுகாப்பில்லை என்ற அச்ச அலை உருவாக்கியிருக்கிறது. மணிப்பூர் மாநிலமே கலவர பூமியாக மாறியிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில்கூட, பிரதமர் நரேந்திரமோடி அவர்கள் அங்கு சென்று அமைதியை ஏற்படுத்தத் தயாராக இல்லை யென்றால், இந்தப் பிரச்சனைகளுக்கு தீர்வுகான எங்குசெல்வது? இந்தச் சூழ்நிலை அந்த மாநில மக்களின் ஆதரவற்ற பரிதாபகரமான நிலையாகும். மனிதாபிமான அடிப்படையில் அந்த மக்களின் உணர்வுகளோடு பங்கெடுத்துக் கொள்ளும் வகையில் இந்தத் தீர்மானத்தின் மூலம் ஒன்றிய அரசு உடன் ஆக்கப்பூர்வமாகத்தலையிட்டு, அமைதியை ஏற்படுத்த வேண்டுமென்று வலியுறுத்தும் இந்த தீர்மானத்தை வார்ப்பித்த தமிழ்நாட்டின் முதலமைச்சரை அந்த மாநில மக்கள் மட்டுமல்ல, மனிதநேய சிந்தனையாளர்கள் அனைவரும் வாழ்த்தி வரவேற்கிறார்கள்.

ஐந்தாவது தீர்மானமாக மாநில அரசுகளுக்கான நிதி உரிமையை நிலை நிறுத்துக என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. 16வது நிதிக்குழுவே பாராட்டத்தக்க வகையில், ஒன்றிய அரசின் வருவாயில் 50 விழுக்காடு நிதிப்பகிர்வையும், ஒன்றிய மாநில அரசுகூட்டுத் திட்டங்களுக்கு 50 விழுக்காடு நிதியையும் ஒன்றிய அரசு மாநிலங்களுக்குத் தர வேண்டுமென்ற இந்தத் தீர்மானம் மற்ற மாநிலங்களுக்கும், நிதிப் பங்கீட்டு முறையில் சரியான வழித்தடம் அமைத்துத் தந்திருக்கிறது என்பதில் வேறுபட்ட கருத்திற்கு இடமில்லை.

ஆறாவது தீர்மானமாக "சட்டமன்றத் தேர்தலுக்கு தயாராவோம்" என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராகவும், தமிழ்நாட்டின் முதலமைச்சராகவும், "திராவிட மாடல் ஆட்சியின்" மூலம் "எல்லோருக்கும் எல்லாம்" என்ற உயர்ந்த மனிதாபிமான சமத்துவ சமூக நீதிக் கோட்பாட்டின் மூலம் தமிழ்நாட்டில் அளப்பரிய சாதனைகளை நிகழ்திக் காட்டியதோடு, அனைத்து மக்களுக்கும் கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு ஆகிய அடிப்படைகளைக் கட்டமைத்து மாபெரும் வளர்ச்சியை உருவாக்கியவரின் வேண்டுகோள்தான் 7வது முறையாகவும் திராவிட முன்னேற்றக் கழகம் வரும் சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெறவேண்டுமென்ற வேண்டுகோளாகும். தமிழக முதல்வர் திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரின் வேண்டுகோள் மகத்தான மக்கள் சக்தியை உருவாக்கிடும் என்பதில் ஐயமில்லை. அந்த மக்கள் சக்தியை ஒழுங்குப்படுத்தி சிந்தாமல், சிதறாமல் ஆதரவு வாக்குகளாக மாற்றிட வேண்டிய களப்பணி ஒவ்வொரு திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டரின் தலையாய கடமை என்பதோடு, திராவிட மாடல் ஆட்சியின் மூலம் வரலாறு படைத்த நம் உயிரணைய தலைவருக்கு ஆற்றிடும் தலையாயக் கடமையாகவும் - நன்றிக்கடனாகவும் ஏற்றுக்கொண்டு ஓய்வின்றிச் செயல்படுவோம்! வெற்றியை உறுதிசெய்வோம், வீணர்களின் விதண்டா வாதத்திற்கு முடிவு கட்டுவோம்!

இந்த 6 தீர்மானங்களின் தாக்கம் 2026 சட்டமன்றத் தேர்தல்வெற்றி என்பதை உறுதிசெய்வோம்!